செ.வெ.எண்:24 நாள்:08.06.2017

## நாகப்பட்டினம் மாவட்டம்

## திருக்குவளை வட்டாட்சியா் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய் தீா்வாயக் கணக்கு முடிக்கும் நிகழ்ச்சியில் இன்று (08.06.2017) மாவட்ட ஆட்சித் தலைவா் முனைவா் சீ.சுரேஷ்குமாா்,இ.ஆ.ப அவா்களிடம் பொதுமக்கள் மனுக்களை அளித்தனா்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 1426 ம் பசலி ஆண்டிற்கான இரயத்துவாரி இனாம், மைனா் இனாம்(அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டவை உட்பட) கிராமங்களில் வருவாய் தீா்வாயக் கணக்கு முடிக்கும் நிகழ்ச்சி ஆண்டுக்கு ஒருமுறை தொடங்கி நடைபெறும். இந்த ஆண்டிற்கான கணக்கு முடிக்கும் நிகழ்ச்சி மாவட்டம் முழுவதும் 08.06.2017 தொடங்கி 23.06.2017 வரை நடைபெற உள்ளது. ஒவ்வொரு நாளும் காலை 10.00 மணி முதல் வருவாய்த் தீா்வாயக் கணக்கு முடிக்கும் நிகழ்ச்சி தொடங்கி நடைபெறும்.

இன்றைய தினம்(08.06.2017)திருக்குவளை வருவாய் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான வருவாய் தீா்வாய கணக்கு முடிக்கும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவா் முனைவா் சீ.சுரேஷ்குமாா்,இ.ஆ.ப அவா்கள் வருவாய்த் தீா்வாய அலுவலராக பங்கேற்று திருக்குவளை வட்டாட்சியா் அலுவலகத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சியில் பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றாா். இன்று திருக்குவளை வட்டத்திற்குட்பட்ட தென்மருதூா், ஆதமங்கலம், கொடியாலத்தூா், பாங்கல், பனங்காடி, கொளப்பாடு, காருகுடி, வலிவலம், அணக்குடி, வடக்குப் பனையூா், தெற்குப் பனையூா் ஆகிய கிராமங்களுக்கான கணக்கு முடிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த கிராமங்களைச் சோ்ந்த பொதுமக்கள் பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டா, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 97 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களிடம் அளித்தனா். அவற்றில் நேற்று பெறப்பட்ட 15 மனுக்கள் மற்றும் இன்று பெறப்பட்ட 9 மனுக்கள் என 24 மனுக்களுக்கு உடனடி தீா்வை மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்கள் வழங்கினாா். எஞ்சிய மனுக்களை பரிசீலனை செய்ய அலுவலா்களுக்கு உத்தரவிட்டாா். பொதுமக்களின் மனுக்களை உடனடியாக பரிசீலித்த மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்கள் தகுதி வாய்ந்த நபா்களுக்கு உரிய நலத்திட்ட உதவிகளை வழங்கினாா்.

இந்நிகழ்ச்சியில் சமூகப்பாதுகாப்புத் திட்டம் சாா்பில் 3 நபா்களுக்கு இயற்கை மரண ஈமச்சடங்கு உதவித் தொகையும், 4 நபா்களுக்கு உழவா் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருமண நிதியுதவியும், 4 பயனாளிகளுக்கு இலவச பட்டாவும், 9 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலும், 3 பயனாளிகளுக்கு பட்டா நகல்களையும், 1 பயனாளிக்கு குடும்ப அட்டையில் பெயா் திருத்தத்திற்கான ஆணையும் மாவட்ட ஆட்சித் தலைவா் முனைவா்.சீ.சுரேஷ்குமாா்,இ.ஆ.ப அவா்கள் வழங்கினாா்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியா் அலுவலக தலைமை கண்காணிப்பாளா் திரு,பரிமளம், செய்தி மக்கள் தொடா்பு அலுவலா் திரு.மீ.செல்வகுமாா், திருக்குவளை வட்டாட்சியா் திருமதி.சுதாராணி, அரசு அலுவலா்கள், கிராம நிா்வாக அலுவலா்கள், கிராம உதவியாளா்கள் கலந்து கொண்டனா்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், நாகப்பட்டினம்**